JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

## S.T.C.362/2017

**Accused present. Accused absent. Petition U/s.317 of Cr.P.C. filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the **07.11.2024**

**P.W.1 Name: Rajagopal S/o.Nalliyappan**

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் பு.சா.1 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1)** என்னுடைய நிறுவனம் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2006ம் ஆண்டு ஆரம்பித்தேன். நானும், என் மனைவியும் சேர்ந்து ஆரம்பித்த கம்பெனியா என்றால் ஆமாம். பதிவு செய்யப்பட்ட கம்பெனி. நான் மேலாண்மை இயக்குநர். என் மனைவி இயக்குநர். மேற்படி நிறுவனம் பதிவு செய்யப்பட்டதற்கும் நான் மேலாண்மை இயக்கனராக இருப்பதற்கும் எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிறுவனத்தின் பதிவு எண் என்ன என்றால் பெரிய எண்ணாக இருக்கும். அதனால் தெரியாது.

**2)** வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு எதிரி எங்கள் நிறுவனத்தில் வியாபார பரிவர்த்தனை வைத்திருந்தாரா என்றால் இல்லை. 08.01.2013ம் ஆண்டு முதல் 13.04.2013 வரை 12 பரிவர்த்தனை நடந்துள்ளது என்றால் சரிதான். பு.சா.ஆ.6 ஆவணத்தில் வாங்குபவர் கையொப்பம் மற்றும் முத்திரை என்ற இடத்தில் வாங்குபவரின் கையொப்பமும், முத்திரையோ இல்லை என்றால் சரிதான். அதேபோல் எங்கள் நிறுவனத்தின் சார்பாகவும் கையொப்பம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 12 பரிவர்த்தனையும் செய்த தேதியிலேயே அந்தந்த பில்களுக்கு உண்டான காசோலைகளை கொடுத்தாரா என்றால் இல்லை. சரக்குகளை பெற்ற பின்பு பில்லுக்கு மேட்ச் செய்து காசோலைகள் கொடுத்தார்.

நீதித்துறை நடுவர், பெருந்துறை (**F.A.C.**)

3) எவ்வளவு நாட்கள் கழித்து காசோலைகள் கொடுக்கப்பட்டது என்றால் சரக்குகள் பெற்ற பிறகு எதிரியும் சில சமயங்களில் அவரது ஆட்கள் எங்கள் நிறுவனத்திற்கு இரண்டு மூன்று நாட்கள் கழித்து வந்தும், ஒரு வாரம் கழித்து வந்தும் காசோலைகள் கொடுத்தனர். எதிரி கொடுத்த முதல் காசோலை தேதியிலிருந்து கடைசி காசோலை தேதி வரை ஏன் பணம் ஆக்குவதற்கு ஏன் காசோலைகளை செலுத்தவில்லை என்றால் எதிரி பணம் தருவதாக கூறி காசோலைகளை வசூலுக்கு செலுத்த வேண்டாம் என்று சொன்னதால் வசூலுக்கு தாக்கல் செய்யவில்லை. மேற்படி காரணத்தை சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேனா என்று தெரியவில்லை.

4) முறையாக கணக்கு வழக்குகள் பராமரித்து வருகிறேனா என்றால் பராமரித்து வருகிறேன். எதிரியுடைய வரவு செலவும் பராமரித்து வந்தேன் என்றால் சரிதான். எதிரிக்கு உண்டான கணக்கு பட்டியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக அனுமதி கொடுத்ததாக தீர்மானம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 20.03.2015 ம் தேதி எனக்கு வழக்கை நடத்த அதிகாரம் வழங்க தீர்மானம் வழங்கப்பட்டுள்ள்து. அந்த ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்யவில்லை எற்ால் சரிதான். மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்வதாக புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) போர்டு மீட்டிங் எப்போது நடைபெறும் என்றால் மாதம் ஒரு முறை அல்லது இரண்டு மாதத்திற்கு ஒருமுறை நடைபெறும். அதற்கென்று தனியாக மினிட்புக் உள்ளது என்றால் சரிதான். அதில் போர்டு மீட்டிங் சம்மந்தமான தீர்மானங்கள் மற்றும் கையொப்பங்கள் இருக்கும் என்றால் சரிதான். பு.சா.ஆ.11 நிறுவன லெட்டரில் உள்ள தீர்மானம் என்றால் ஆமாம். மினிட் புக்கில் இருந்து உண்மை நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பு.சா.ஆ 11 வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பு.சா.ஆ.1 பின்பக்கத்தில் தீர்மானத்தின் சாராம்சம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு கீழ் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

நீதித்துறை நடுவர், பெருந்துறை (**F.A.C.**)

**6)** மினிட் புக் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணம் அவ்வாறு மினிட் புக் இல்லை என்றால் சரியல்ல. 12 பரிவர்த்தனைகளின் போது கொடுத்த காசோலைகளின் நகல்களில் நோட்டரி வழக்கறிஞரிடம் கையொப்பம் பெற்றுள்ளேன். அதை எப்போது வாங்கினேன் என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பு வாங்கினேன். நோட்டரி வழக்கறிஞர் கையொப்பத்தில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பு.சா.ஆ.10 வரிசைகளும், பு.சா.ஆ.11 ஆவணங்களும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பழைய காசோலைகளை எப்போது எதிரிக்கு திருப்பி கொடுத்தேன் என்றால் வழக்கு காசோலைகளை கொடுத்துவிட்டு 12 காசோலைகளை பெற்றுக் கொண்டார். எனது நிறுவனத்திற்கு வந்து வழக்கு காசோலைகளை கொடுத்துவிட்டு அதற்கு முன்பு கொடுத்த காசோலைகளை பெற்றுக் கொண்டாரா என்றால் ஆமாம்.

**7)** 12 காசோலைகளை அதன் தேதிகளில் வசூலுக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி சொன்னதால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு பணம் தேவைப்படவில்லையா என்றால் தேவை இருந்தது. எதற்காக பழைய 12 காசோலைகளை ஜெராக்ஸ் காப்பிகளை வாங்க வேண்டிய அவசியம் என்ன என்றால் எனக்கு அத்தாட்சி வேண்டுமென கேட்டு வாங்கினேன். வழக்கு காசோலைகளை அதனுடைய தேதிகளில் வசூலுக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எதிரியிடம் கேட்டு அவர் சொல்லும்போதுதான் தாக்கல் செய்ய முடியும். அதனால்தான் தாக்கல் செய்யவில்லை.

**8)** காசோலைகளின் மதிப்பு காலம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 90 நாட்கள். எதிரி பணம் தர காலதாமதம் ஆனதால் காசோலைகளை தவிர வேறு ஆவணங்களை கேட்டு வாங்கினேனா என்றால் இல்லை. சிவில் வழக்கு ஏதாவது எதிரி மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய நிறுவனம் பதிவு செய்யப்படாத நிறுவனம் என்பதால்தான் சிவில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலைகளை முதல் முறையாக தாக்கல் செய்தேனா அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறை தாக்கல் செய்தேனா என்றால் 10 வருடம் ஆகிவிட்டதால் ஞாபகமில்லை. சட்ட அறிவிப்பிலும், புகாரிலும் கடைசி முறையாக

07.03.2015 காசோலைகள் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) சட்ட அறிவிப்பிலும், புகாரிலும் நிலுவைத் தொகைக்காக எதிரி காசோலைகள் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 11 காசோலைகளில் நிரப்பப்பட்ட வாசகங்களில் உள்ள கையொப்பம் ஒரு மாதிரியாகவும், ஒரு காசோலையில் நிரப்பப்பட்ட வாசகங்களில் உள்ள கையொப்பம் வேறு மாதிரியாகவும் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பு.சா.ஆ.10 வரிசை காசோலைகளின் நகல்களில் உள்ள நோட்டரி வழக்கறிஞர் கையொப்பத்தில் தேதி இல்லாததாலும், ரோல் நெம்பர் இல்லாததாலும் பதிவு செய்யப்பட்டதற்கான பதிவு எண் குறிப்பிடாததாலும் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

10) சி.எம்.பி.2496/2019 என்ற மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். எனது வழக்கு நிலைக்காது என்பதால்தான் பின்னிட்டு பு.சா.ஆ.10, பு.சா.ஆ.11 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி சரக்கு எடுத்துக் கொண்டதற்காக டெலிவரி சலான் போன்ற ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சங்கதிகள் என் மனைவிக்கு தெரியுமா என்றால் வியாபாரத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் என் மனைவிக்கு தெரியாது. நான் வருமான வரி செலுத்துபவரா என்றால் ஆமாம். எதிரி செலுத்த வேண்டிய நிலுவை தொகை வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

11) ஏற்கனவே எதிரி என்னிடம் கொடுத்திருந்த 12 காசோலைகளுக்கு உண்டான தொகைகளை என்னிடம் செலுத்திவிட்டதால் அந்த காசோலைகளை எதிரியிடம் திரும்ப கொடுத்துவிட்டேன் என்றும் வழக்கு காசோலைகள் மேற்படி 12 காசோலைகளுடன் பாதுகாப்பிற்காக என்னிடம் கொடுத்து வைத்திருந்ததை பூர்த்தி செய்து எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழகது காசோலைகளில் பூர்த்தி செய்யப்பட்ட வாசகங்களில் உள்ள கையெழுத்து எதிரியின் உடையது அல்ல என்றால் சரியல்ல. பாதுகாப்பு காசோலைகளை நான் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி சட்டப்படி எனக்கு பணம் கொடுக்க

**கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அதனால்தான் கணக்கு பட்டியல் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(ஒப்பம்)
**நீதித்துறை நடுவர்,**
பெருந்துறை (**F.A.C.**)